## நெல்லை மாவட்டம்

# அரசு துறைகளின் கீழ் வளர்ச்சித் திட்டப் பணிகள்!

### சட்டப் பேரவை உறுதிமொழிக் குழு தலைவர் தி.வேல்முருகன் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

நெல்லை.ஜூலை.31–

நெல்லை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (29.07.2025) அன்று திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு அரசு துறைகளின் கீழ் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து சட்டப் பேரவையின் 2024–2026–ஆம் ஆண்டிற்கான உறுதிமொழிக் குழு தலைவர், சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், முதன்மை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், சட்டமன்ற உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.அருள் (சேலம் மேற்கு), ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் (விருதுநகர்), கோ.தளபதி (மதுரை வடக்கு), அ.நல்லதம்பி (திருப்பத்தூர்), சா.மாங்குடி (காரைக்குடி), எம்.கே.மோகன் (அண்ணாநகர்), எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை) மற்றும் மு.அப்துல்வஹாப் (பாளையங்கோட்டை), ரூபி. ஆர்.மனோகரன் (நாங்குநேரி) ஆகியோர் முன்னிலையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப் பேரவை உறுதிமொழிக் குழு தலைவர், சட்டமன்ற உறுப்பினர் தி.வேல்முருகன் தெரிவித்ததாவது.

சட்டபேரவையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் அறிவிக்கும் திட்டங்கள்,சட்டமன்ற உறுப்பினர்கள் எழுப்பும் வினாக்கள் அதனடிப்படையில் அறிவிக்கப்படும் திட்டப்பணிகள் ஆகியவை உறுதிமொழியாக கருதப்படுகிறது. இந்த உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதில் அந்தந்த துறை சார்ந்த அலுவலர் களின் பங்கு மிகமுக்கியமானதாகும். அந்தவகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டு நிலுவையில் உள்ளஉறுதிமொழிகள் அவற்றின் மீது மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.ஏற்கனவே தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுதிமொழி அளிக்கப்பட்டு இன்று ஆய்வுக்கு எடுக்கப்பட்ட உறுதிமொழிகளின் எண்ணிக்கை 137 ஆகும். இந்த ஆய்வில் 8 உறுதி மொழிகள் படித்து பதிவு செய்யப் பட்டவையாகும்.மேலும் 43 உறுதிமொழிகள் முழுமையாக நிறைவேற்றப் பட்டுள்ளன. இதில் 86 உறுதிமொழிகள் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளன.

நடப்பு சட்டமன்றப் பேரவையில் எடுத்துக்கொள்ளப்பட்ட 51 உறுதி மொழிகளில்13 உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.2 உறுதி மொழிகள் படித்து பதிவு செய்யப்பட்டுள்ளன.மீதமுள்ள 36 உறுதிமொழிகள் நிலுவையில் வைக்கப் பட்டுள்ளன. மேலும், நிலுவையிலுள்ள உறுதி மொழி களை விரைந்து முடித்திட துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் இன்றையதினம் திருநெல்வேலி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்கு நேரடியாக சென்று அரசு துறைகளின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.குறிப்பாக, டவுண் நெல்லையப்பர்,காந்திமதி அம்மன் கோவிலில் ரூ.4 கோடி மதிப்பில் கல்மண்டபம் புதுப்பிக்கும் பணிகள், தெப்பக்குளம் சீரமைக்கும் பணி, 425 கிலோ மதிப்பிலான வெள்ளித் தேர் செய்யும் பணிகள் நடைபெற்று வருவது குறித்தும், ரூ.5.83 கோடி மதிப்பில் மேலப்பாளையம் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவமனை மற்றும் தொற்றா நோய் பிரிவின் கட்டுமானப் பணிகளையும்,திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை முதற்கட்டமாக கொங்கந்தான்பாறை விளக்கு முதல் தருவை வரையுள்ள சாலை அமைக்கும் பணிகள் ரூ.180 கோடி மதிப்பீட்டில் 2 உயர்மட்ட பாலங்கள்,2 சிறு பாலங்கள்,44 பெட்டி பாலங்கள் மற்றும் 1 இரயில்வே மேம்பாலத்துடன் நடைபெற்று வருவது குறித்தும், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் முதலமைச்சரின் அறிவிப்பு 2023–2024–ன் படி ரூ.9.38 கோடி மதிப்பில் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூ.5.06 கோடி மதிப்பில் புதிய மரபணு ஆய்வக பிரிவு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதையும், பாளையங்கோட்டை உணவு பகுப்பாய்வு கூடத்திற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சட்ட சபையில் அறிவிக்கப்பட்டபடி ரூ.1.69 கோடி மதிப்பீட்டில் முதல் தளத்தில் நுண்ணுயிரியல் ஆய்வகம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், உபகரணங்கள் மற்றும் மேம்பாட்டு பணிக்காக ரூ.4.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதையும்,பாளையங்கோட்டை சித்த மருத்துவக்கல்லூரி, மருத்துவமனையில் ரூ.13.12 கோடி மதிப்பில் வெளிநோயாளி பிரிவினை யும்,ரூ.14.81 கோடி மதிப்பில் நிர்வாக பிரிவினையும், ரூ.7 கோடி மதிப்பில் விடுதி கட்டிடத்தினையும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டதோடு, பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார். கூட்டத்தில்,சட்டப் பேரவை இணைச் செயலாளர் மு.கருணாநிதி சார்பு செயலாளர் த.பியூலஜா திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் மோனிகா ராணா, களக்காடு,முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் மு. இளையராஜா,மாவட்ட வருவாய் அலுவலர் மா.சுகன்யா, தனி வருவாய் அலுவலர் (சிப்காட்) இரா. ரேவதி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அனிதா, இந்துசமய அறநிலையத்துறை இணை ஆணையர் கவிதா பிரியதர்ஷினி இணை இயக்குநர் (மருத்துவம்) மரு.லதா,நெடுஞ்சாலைத் துறை கோட்டப்பொறியாளர் (திட்டங்கள்) லிங்குசாமி உட்பட அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நெல்லை பேட்டை பகுதி 16 வது,24 வது வார்டு பகுதியில் மத்திய மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் மீரான் மைதீன் ஏற்பாட்டில் மண், மானம்,மொழி காக்க ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நிகழ்வு முன்னாள் அமைச்சர் கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் வட்ட செயலாளர்கள் லெனின்,ஆனந்த பெருமாள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நெல்லை பேட்டை கிழக்கு பகுதி செயலாளர் நமச்சிவாயம் வரவேற்புரையாற்றினார். நிகழ்வில் மாநில மகளிர், தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்தியானந்த்,மாவட்ட துணை செயலாளர் கிரிஜாகுமார், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆதிதிராவிடர் நலக்குழு நவநீதன், வர்த்தக அணி மு.சேக்தாவூது,மாவட்ட பிரதிநிதி சுரேஷ்,வட்ட பிரதிநிதிகள் பட்டு,பிந்து யாஸ்மின்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் காதர்ஒலி, ஶ்ரீராம்,நெசவாளர் அணி துணை அமைப்பாளர் அங்கப்பன் ராஜ்,தகவல் தொழில்நுட்ப அணி நெல்லை பேட்டை பகுதி ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன்,BLA2 சௌவுக்கத் அலி,மைதீன்,பயாஸ், யூனுஸ், அஹமத்,நவீத்,கலாமுல்அசன்,சாகுல் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் படி முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மேலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி குடும்ப அட்டைதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் ஆயிரக்கணக்கான பயனாளிகள் பங்கேற்றனர்.




திருநெல்வேலி மேற்கு புறவழிச்சாலை திட்டப் பணிகள் கொங்கந்தான்பாறை விளக்கு பகுதியில் சாலை அமைக்கும் பணிகள் குறித்து சட்டப்பேரவை உறுதிமொழி குழு தலைவர் தி.வேல்முருகன்,மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,முதன்மைச் செயலாளர் முனைவர் சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் குழு உறுப்பினர்கள் அருள் (சேலம் மேற்கு) கோ.தளபதி (மதுரை வடக்கு)நல்லதம்பி(திருப்பத்தூர்) மாங்குடி(காரைக்குடி)மோகன் (அண்ணா நகர்) ஜெயக்குமார் (பெருந்துறை) மற்றும் மு.அப்துல் வஹாப் (பாளை) ரூபி மனோகரன் (நாங்குநேரி) ஆகியோருடன் பார்வையிட்டு ஆய்வுப் பணி மேற்கொண்டார்.




தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம்,எப்போதும்வென்றான் சோலைசாமி திருமண மண்டபத்தில் எப்போதும் வென்றான், மீனாட்சிபுரம், சந்திரகிரி உள்ளிட்ட ஊராட்சியை சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்க்கண்டேயன் துவக்கி வைத்து வருவாய்த்துறை சார்பில் பட்டா பெயர் மாற்றுதல் பணி ஆணை, மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கடன் மற்றும் வேளாண்மைத் துறை சார்பில் நலத்திட்டங்கள் வழங்கினார். நிகழ்வில் ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் காசி விஸ்வநாதன், விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், விளாத்திகுளம் தெற்கு ஒன்றிய செயலாளர் இம்மானுவேல், எப்போதும் வென்றான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சோலைசாமி உள்ளிட்ட பொதுமக்கள், துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

